★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 20உ செவ்வாய் (4—9—56) ★ ★ வெளியீடு: ஆவணி 21உ புதன் (5—9—56) [இதழ் 73

தானம் தந்த பசுக்கள் பால்தர மறுத்துவிட்டன!

கோவை, செப். 2—

ஆச்சாரியா விநோபா பாவேக்கென பழையகோட்டை பட்டக்காரர், தனது பண்ணையிலிருந்து இரண்டு பசுமாடுகளை அனுப்பி வைத்திருந்தார்.

ஆனால் அவை இரண்டும், 14 மைல் பிரயாணத்திற்குப் பிறகு பால்தர மறுத்துவிட்டனவாம்! அதனால் அந்தப் பசுக்கள் பட்டக்காரரிடமே திரும்பி வருகின்றனவாம்!

பட்டக்காரரின் பண்ணை ஆசியாவிலேயே சிறந்த சில பண்ணைகளுள் ஒன்று என்றும், அகில இந்திய கால்நடைக் காட்சிகள் பலவற்றில் பட்டக்காரரின் பசுக்கள் பரிசுகள் பல பெற்றவை யென்றும் கூறப்பட்டுள்ளது.

கோர இரயில் விபத்திற்குக் காரணம்:

'அதிகாரிகளின் அலட்சியப் போக்குதான்'

'விபத்திற்கு 21 மணி நேரத்திற்கு முன்பே எச்சரிக்கை தரப்பட்டது'

'இரயில் நிலைய அதிகாரி அதனை பொருட்படுத்தவில்லை'

மக்கள்சபை உறுப்பினர்கள் வெளியிடும் தகவல்

ஐதராபாத், செப். 3—

கடந்த செப்டம்பர் முதல்தேதிஇரவு ஐதராபாத்அருகேமெகபூப் நகருக்கு வந்துகொண்டிருந்த பிரயாணிகள் இரயில் வண்டி விபத்துக்குள்ளாகி சுமார் 121 பேர்களைக் கொன்று குவித்ததே—அந்த விபத்து நிகழ்ந்ததற்குக் காரணம், இரயில்வே அதிகாரிகளின் அலட்சியப் போக்குதான் என்று இரண்டு மக்கள் சபை உறுப்பினர்களும், ஐதராபாத் சட்டசபை எதிர்க் கட்சித் தலைவரும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் குற்றம் சாட்டியிருக்கின்றனர்.

"விபத்து நிகழ்வதற்குச் சரியாக 21-மணி நேரத்திற்கு முன்னால் மெகபூப் நகர் இரயில்வே தொழிலாளர் சங்கத் தலைவர் மெகபூப் நகர் இரயில்வே நிலைய அதிகாரியிடம் (ஸ்டேஷன்—மாஸ்டர்), துரோணசலம்—செகந்தராபாத் பாதையில் இரயில் விடுவதில் உள்ள ஆபத்து குறித்து எச்சரித்தார்; ஜாத்செர்லாவிற்கு இரயில் போகக்கூடாதென அவர், இரயிலில் உள்ள அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுத்தும் எச்சரிக்கை தந்தார்; இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமலும், பெய்துகொண்டிருந்த பெருமழை குறித்துக் கவலை கொள்ளாமலும் அலட்சியமாக இருந்ததின் விளைவே விபத்திற்குக் காரணம்" என்று அவர்கள் அறிக்கையில் கூறுகின்றனர்.

நகரைவிட்டுப் புறப்பட்டபின் விபத்துக்குள்ளான இரயில், பெருமழை காரணமாக இடையில் நிறுத்தப்பட்டு, பின்னர் மெதுவாக நகர்த்திச் செல்லப்பட்டிருக்கிறது.

"இப்போது இரயில் கவிழ்ந்த பாலம், கடந்த ஆகஸ்டு 1-ந் தேதியன்று, போசன்குந்தா ஏரி உடைப்பெடுத்ததின் விளைவாகப் பழுதாயிற்று; அதனை அப்போது அவசர அவசரமாக அதிகாரிகள் பழுது பார்த்தனர்; ஆனால், பாலம் சரிவர முழுவதுமாகப் பழுது பார்க்கப்படவில்லை; இப்படி அதிகாரிகளின் அலட்சியப்போக்கே விபத்திற்குக் காரணமாக அமைந்திருக்கிறது"

என்றும் அவர்கள் மேலும் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இவர்கள் மூவர் மட்டுமின்றி கம்யூனிஸ்டு எம். பி. பூபேஷ் குப்தாவும், இரயில்வே நிர்வாகிகளின் திறக்குறைவு—அலட்சியப் போக்கே எண்ணற்ற குடிமக்களைப் பலி கொண்டது என்று குற்றம் சாட்டியிருக்கிறார்.

இவர்கள் அனைவரும், விபத்து குறித்து ஒரு நீதிமன்ற விசாரணை உடனடியாக நடத்தப்படவேண்டுமெனக் கோரியிருக்கின்றனர்.

நில வார மசோதா

திட்டக் குழு யோசனையை ஏற்க சென்னை மறுத்துவிட்டதாம்

சென்னை, செப் 2—

மகசூல் பங்குப் பிரிவினை குறித்து திட்டக் குழுவின் யோசனையை ஏற்க சென்னை சர்க்கார் மறுத்துவிட்டதாம்.

சென்னை நில வார மசோதாவின்படி அறுவடை, பண்ணையாளுக்கும்—பிரபுவுக்குமிடையில் 4 : 6 என்ற விகிதத்தில் பிரித்துக் கொள்ளப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. திட்டக் குழுவினர் விவசாயிகளுக்கு 75 சதவிகிதமும், பிரபுக்களுக்கு 25 சதவிகிதமும் தரவேண்டும் என்று யோசனை கூறியது என்றும். இதனை ஏற்கத்தான் சென்னை சர்க்கார் மறுத்துவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

மேலும் சென்னை சர்க்கார், நில உடமைக்கு வரம்பு கட்டுவது, உழுபவனுக்கு நிலம் தருவது என்ற திட்டத்தைப் பொதுத் தேர்தல் முடியும் வரை ஒத்திவைத்திருக்கிறதாம்!

நெருக்கடி ஏற்பட்டால் நேரு செல்வாராம்!

சூயஸ் கால்வாய் நெருக்கடி குறித்துக் கெய்ரோவில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் கவலை தரக்கூடியதாக மாறிவிடும் நிலை ஏற்பட்டால், பிரதமர் நேரு அடுத்த வாரத்தில் கெய்ரோவுக்கு அவசரமாக விரைவாராம்!

இப்போது இந்தியாவில் சுமார் 5,80,000 ஏக்கராவில் உருளைக் கிழங்கு சாகுபடியாகிறது.

வேறு வழியில்லையாம்!

புதுடில்லி, செப். 1—

"திரு-கொச்சி சட்டசபை கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி அமுல் நடத்தப்படுவதால், நவ. 1-ந் தேதி முதல் திரு-கொச்சியில் இணையவிருக்கும் மலபார் மாவட்ட உறுப்பினர்கள் (தற்போது சென்னை சட்டசபையில் உள்ளவர்கள்) தங்கள் உறுப்பினர் பதவியை இழக்கவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை" என்று உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த், மக்கள் சபையில் கூறியுள்ளார்.

'ஆண்களைப்போலவே பெண்களும் திறமையாக ஊராள முடியும்'

பஞ்சாயத்துத் தலைவி முழக்கம்

"ஆண்களைப்போலவே பெண்களும் திறம்பட நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்ள முடியும். சமுதாய நலனுக்கான வேலைகளைச் செய்வது பெண்களின் சக்திக்கு அப்பாற்பட்டது ஒன்றும் அல்ல; திறமையான நிர்வாகிகள் என்ற பெருமையைப் பெண்கள் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். இதர கிராமங்கள் நமது கிராமத்தைப் பின்பற்றும் ஒரு 'மாதிரி' கிராமமாக இக்கிராமத்தைச் சிறந்ததாக உருவாக்கவேண்டும். இக்கிராமத்தை எழில்மிக்க ஒன்றாக்க வேண்டுமென்பதே எமது நோக்கம். பொழுதுபோக்கிற்கென உல்லாசப் பூங்காக்கள் அமைத்தும், மற்றும எல்லாவித வசதிகளும் செய்து கொடுப்போம்"

என்று, நெல்லூர் மாவட்டத்திலுள்ள உவ்வேரு கிராமப் பஞ்சாயத்துக் குழுத் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி விமலா தேவி அவர்கள், பஞ்சாயத்து உறுப்பினர் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த உவ்வேரு கிராமப் பஞ்சாயத்துக் குழு முழுதும் பெண்களையே உறுப்பினர்களாகக் கொண்ட ஒன்று என்பது நன்கு கருதத்தக்கது. தலைவர் தேர்தலின்போது அவ்வம்மையார் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இரண்டு வாரங்கள் தங்க இந்தியா வருகிறார்!

சீனப் பிரதமர் சூ-யென்-லாய், இவ்வாண்டு டிசம்பர் மாதத்தில் இந்தியாவுக்கு வருவார் என்றும், இரு வாரங்கள் இங்கு அவர் தங்கியிருப்பார் என்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே; ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே'

சர்க்கார் பஸ் தொழிலாளர்கள் மூன்று சங்கங்களில் பிரிந்திருப்பதேன்?

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அறிவுரை

29—8—56 மாலை சென்னை பழைய காங்கிரஸ் திடலில் நடைபெற்ற சர்க்கார் பஸ் தொழிலாளர் சங்கப் பொதுக்கூட்டத்தில் தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு:—

"அன்புள்ள தலைவரவர்களே! தொழிலாளர் தோழர்களே! சென்ற ஆண்டு, உங்களில் வேறுபட்டிருக்கும் மற்றொரு சங்கப் பொதுக்கூட்டத்தில் நான் கலந்து கொண்டபோது, இந்த இரு சங்கங்களும் ஒன்று சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பினை சர்க்கார் பஸ் தொழிலாளர்களாகிய உங்கள் சங்கங்களை நிர்வகிக்கும் தலைவர்கள் உண்டாக்குமாறு நான் கேட்டுக்கொண்டது உங்களில் பலருக்கு நினைவிருக்கலாம் என்று நம்புகிறேன்.

"சர்க்கார் பஸ் தொழிலாளர்களாகிய உங்களை இன்று மூன்று சங்கங்களின் பெயரால் பிரித்து வைத்திருப்பது உங்களிடையே வளரவேண்டிய மகத்தான ஒற்றுமைக்குப் பாதகம் விளைவிக்கிறதென்பதை இம்மூன்று சங்கங்களையும் நடத்திச் செல்லும் தலைவர்களும் நிர்வாகிகளும் உணராதது வருந்தத்தக்கதாகும்.

"நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கையின்பால் நம்பிக்கைகொண்ட தோழர்கள் இந்த இரு சங்கங்களிலும் தொடர்பு கொண்டிருப்பதால் எங்களைப் போன்றவர்கள் சற்று உரிமையுடன் கருத்தைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

"சாதாரணமாக தொழிற்சங்கத் துறையில் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரே சங்கமாக இயங்கினாலே, ஆளும் வர்க்கத்தினர்—அல்லது முதலாளிகள், தொழிலாளர்களின் கோரிக்கைக்கு இணங்குவது கிடையாது; அதிலும், காங்கிரஸ் ஆட்சியில் தொழிற்சங்கங்களின் வலிவும் பொலிவும் சிதைவுறப்பட்டு வருகிறது. அந்த அளவுக்குத் தொழிலாளர்களிடையே பிளவு மனப்பான்மை—பிரித்தாளும் சூழ்ச்சியினை இன்று அதிகாரபீடத்திலிருப்பவர்கள் காருக்காக செய்து வருகின்றனர்.

"வெள்ளையர்கள் ஆட்சியின்போது, தொழிற்சங்கங்களுக்கும் அதனை நடத்திச் செல்லும் தலைவர்களுக்கும் காட்டப்பட்டுவந்த ஓரளவு கண்ணியத்தைக்கூட இன்று பதவி வகிக்கும் பாரதப் புதல்வர்களிடம் காண்பது அரிதாகிவிட்டது. எனவே நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டாலன்றி இந்திய எசாதிபத்தியபரம்பரையினரின் கோணல் புத்தியையும் அவர்களால் மிக ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பட்டு வரும் முதலாளித்துவத்தின் அநீதிகளையும் தட்டிக் கேட்க முடியாது என்பதை நீங்கள் உணரவேண்டியது இன்றியமையாததாகும்.

"1947-ம் ஆண்டு மார்ச்சு மாதம் நிறுவப்பட்ட சர்க்கார் பஸ் இலாகாவும் அதில் பணியாற்றும் நீங்களும் இன்றுவரை ஏறத்தாழ 10 ஆண்டுகள் கடந்தும்கூட நிரந்தரமாக்கப்படாமல், தற்காலிக இலாகா—தற்காலிகத் தொழிலாளர்கள் என்ற சாதாரண நிலையில் உங்களை இந்த சர்க்கார் நடத்தி வருகிறதென்றால், இதைவிட அநீதி வேறு இருக்க முடியாதல்லவா? இந்த அக்கிரமம் ஒழிக்கப்பட்டு 1947-ம்ஆண்டிலிருந்தே நிரந்தரமாக்கப்பட்டதாக அரசியலார் உத்திரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றால், சர்க்கார் பஸ் தொழிலாளர்களாகிய நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டிருந்தால் தானே முடியும்?

"சர்க்கார் நடத்தும் இந்தப் பஸ் தொழில், துவக்கத்தில் 1947-ம் ஆண்டில் ஏழு அல்லது எட்டு பஸ்களே இருந்த நிலை மாறி இன்று 500-க்கு மேற்பட்ட பஸ்கள் வேலை செய்வதாகவும் தெரிகிறது. அதுபோலவே 6 இலட்ச ரூபாய் வருமானத்திலிருந்து இன்று 16 இலட்சம் வரை வருவாய் உயர்ந்திருப்பதாகவும் தெரிகிறது. இவ்வாறிருந்தும் உங்களுக்குப் பஞ்சப்படி உயர்வு இல்லை. உடைகள் வழங்கு

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 4-9-'56 செவ்வாய்

ஏகாதிபத்திய நோக்கம் அம்பலம்!

★

"விஞ்ஞான, தொழில் நுணுக்கப் பயிற்சியை ஆங்கிலத்தின் மூலம்தான் தர வேண்டியுள்ளது என்பதை நான் மிகத் தெளிவாக உணர்ந்துள்ளேன்; இது ஒன்றும் வாதத்திற்குரிய விவகாரமல்ல"

என்று இந்தியத் துணைக்கண்டத்துப் பிரதமர் பண்டித நேரு அவர்கள் மாநிலங்களின் கல்வி மந்திரிகள் மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

ஆங்கிலம் இந்தியாவில் தொடர்ந்து நீடிக்கவேண்டியுள்ளதின் அவசியத்தை இவ்வளவு தெளிவாக உணர்ந்திருக்கிற நேரு பண்டிதர், அதே கல்வி மந்திரிகள் மாநாட்டில், இந்தி, இந்தியாவின் பொது மொழியாக வேண்டியதின் அவசியத்தையும் வலியுறுத்தியிருப்பது, டில்லிப் 'பெரிய மனிதர்'களின் முதிர்ந்த முரண்பாடான போக்கிற்குத் தலைசிறந்த சான்ருகும்.

"ஆங்கிலத்தின் இடத்தை இந்தி பெறவேண்டியது கட்டாயமாகும்; ஆனல், இதர மொழிகளின் இடத்தை இந்தி பறித்துக் கொள்ளக் கூடாது. ஆங்கிலம், கடந்த ஒரு நூற்ருண்டில் (இந்தியாவை) ஒன்றுபடுத்தும் ஒரு வகைச் சக்தியாக விளங்கி வந்திருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. அதுபோல, ஆங்கிலத்திற்குப் பதிலாகப் பொதுமொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் இந்தியும் (இந்தியாவை) ஒன்றுபடுத்தும் சக்தியாக விளங்க வேண்டும்"

என்று, அவர் தந்திருக்கும் விளக்கம், வடநாட்டுப் பெரிய மனிதர்களின் ஏகாதிபத்திய உள்ளக்கிடக்கையைத் தெள்ளத்தெளிய இருள் விலக்கிக் காட்டுவதாயுள்ளது.

விஞ்ஞானத் தொழில் நுணுக்கப் பயிற்சி போன்ற எந்த ஒரு உபயோககரமான வேலைக்கும் இந்தி பயன்படாது—ஆங்கிலம்தான் வேண்டியுள்ளது என்று ஒப்புகிற நேரு, உபயோகப்படாத இந்தியை இந்தியாவின் பொதுமொழியாக்குவதற்குத் துடிக்கிருர்.

'இந்திதான் இந்தியாவின் பொதுமொழி என்பது கட்டாயமாகும்' என்று, குரலில் உறுதி தொனிக்கப் பேசுகிருர்.

'உபயோகப்படாது; ஆனல், அதுவே பொது மொழி' என்ற வாதத்தில் நிரம்பிக்கிடக்கும் விவேகத்தை பேரறிவாளர்கள்தான் கணக்கிட்டுக் கூறவேண்டும்.

'இந்தியா ஒரு நாடல்ல—ஒரு பொது மொழி வேண்டுமென்பதற்கு; இந்தியா ஒரு துணைக்கண்டம்,' என்ற சரித்திர, பூகோள உண்மையை புரட்டு பேசி மறைத்துவிட நினைக்கும் வடநாட்டு எத்தர்களின் இந்தியை இந்தியாவின் பொது மொழியாக்கும் முயற்சிக்குத் தென்ஞட்டு மக்கள், தோல்வியையே தேடித்தருவார்கள் என்று நாம் எச்சரிக்கிருேம்.

இந்திதான் இந்தியாவின் பொது மொழியாக வேண்டுமென்பதற்குப் பண்டிதர் போன்ற வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் மூலவர்கள் கூறுகிற விசித்திர காரணம், ஏகாதிபத்திய எதிர்ப்பிற்காகவே சென்மம் எடுத்து, ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியில் திரளுவதையே வாழ்க்கை இலட்சியமாகக்கொண்டு, 'அந்த அணியின் கூர் மழுங்காத வாட்களாக விளங்குபவர்கள் நாங்கள்தான்' என்று சுயப்பிரகடனம் செய்துவரும் 'முற்போக்காளர்'களுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக எப்படிப்படுகிறதோ தெரியவில்லை.

'இந்தியா' என்ற அரசியல் அமைப்பை உருவாக்கிய வெள்ளையர்கள் ஆங்கிலத்தை எந்த ஏகாதிபத்தியச் சுரண்டல் நோக்கங்களுக்காகப் பொது மொழியாகத் திணித்தார்களோ, அதே நோக்கங்களுக்காகத்தானே டில்லிப் பெரிய மனிதர்கள், இந்தியையும் திணிக்கவேண்டுமென்கிருர்கள்?

'ஆங்கிலத்தைப் போலவே இந்தியும் (இந்தியாவை) ஒன்றுபடுத்தும் சக்தியாக விளங்க வேண்டும்,' என்று ஒளிவு மறைவின்றிப் பண்டிதர் கூறியிருப்பது, 'ஆங்கிலம் திணிக்கப்பட்ட நோக்கங்களுக்காகவே இந்தியும் திணிக்கப்படுகிறது' என்ற உண்மையை மட்டுமின்றி, 'இந்தியா இன்றும் ஒன்றுபடுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளது—இந்தியா இப்போது ஒன்றுபட்டிருக்கவில்லை (அரசியல் துறை நீங்கலாக)—இந்தியாவில் ஒற்றுமை இல்லை—இனிமேல்தான் அது உருவாக்கப்படவேண்டும்'—என்ற உண்மையையும் உள்ளங்கை நெல்லிக் கனியாகத் தெள்ளெனத் தெளிவாக்குகிறது.

'வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் துப்பாக்கி முனையால் திணித்த 'அரசியல் ஒற்றுமை' எந்த அவசியத்திற்காக நீடிக்க வேண்டும்? அந்த 'அரசியல் ஒற்றுமை'யால் நாங்கள் எங்கள் நாட்டின் சுதந்திர ஆதிபத்திய உரிமைகளை இழந்து அடிமைகளாக வாழும் நிலை எதற்காக நீடிக்க வேண்டும்?"—என்று தென்ஞட்டு மக்கள் உரிமைக் குரல் எழுப்பிக்கொண்டிருக்கின்றனர் என்பதைப் பார்க்க மறுத்துவிட்டு, 'இந்தியாவின் பொது மொழி இந்திதான்' என்று பேசுகிறவர்களை—அவர்கள் எத்தனைதான் 'நாங்கள் முற்போக்குவாதிகள்; ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியின் கூர்மழுங்காத ஈட்டிமுனைகள்' என்று தம்பட்டமடித்துக்கொண்டிருந்தாலும், தென்ஞட்டு மக்கள் அவர்களை 'தமது தாயகம் எது என்பதையே தெரிந்து கொள்ளாத அப்பாவிகள் — அல்லது, தெரிந்து கொள்ளாததுபோல நடிக்கும் பகல் வேஷக்காரர்கள்' என்றுகூட அல்ல—துரோகிகள் என்றே அழைப்பர்!

'பொறுப்பை உதறித் தள்ளிய சட்டசபை உறுப்பினர்களுக்குத் தேர்தலில் பாடம் கற்பிக்க வேண்டும்'

தமிழ்நாடு பெயரமைப்பு மாநாட்டு தீர்மானங்கள்!

சேலம், ஆக. 31—

"தேவிகுளம், பீர்மேடு, சித்தூர் முதலிய தமிழ்ப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கைக்குப் போதிய ஊக்கம் காட்டாமல், பொறுப்பைத் தட்டிக்கழித்த சட்டசபை உறுப்பினர்களுக்கு வருகிற பொதுத் தேர்தலின்போது தக்கபாடம் கற்பிக்க வேண்டும்," என்று, தமிழ் மக்களைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று, 26—8—56-ல், திருச்செங்கோட்டில் நடைபெற்ற தமிழ் நாடு பெயர் அமைப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இம்மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய வேலூர் தோழர் கு. மு. அண்ணல்தங்கோ அவர்கள், தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

"எல்லா நாடுகளும் மொழியின் பெயராலேயே அழைக்கப்படுகின்றன; அதைப்போலவே, சென்னை மாநிலத்திற்கும் 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டும்.

"இந்தியத் தேசிய மொழிகளுள் ஒன்ருக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் தமிழ் மொழியும் நாட்டு ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும்."

தீர்மானங்கள்

பொங்கல் விழா ஒன்றே தமிழர் திருவிழாவாக இருப்பதால் அதற்கு 5 நாட்கள் அரசாங்கம் விடுமுறை அளிக்க வேண்டுமென்றும், 'கனுப் பொங்கல்' அன்று திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட வேண்டும் என்றும், சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்றோ, அல்லது 'தமிழ் நிலம்' என்றோ பெயரிட வேண்டுமென்றும், சென்னை நகரத்தைத் 'தமிழகம்' என்றும், மதுரை நகரத்தைத் 'தமிழ்க் கூடல்' என்றும் அழைக்க வேண்டுமென சென்னை—இந்திய அரசாங்கங்களைக் கேட்டுக்கொண்டும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தென்னுட்டில் தொழில் வாய்ப்புகள்

சென்னை மாநிலத்தில் என்னென்ன தொழில்கள் துவங்க வாய்ப்பும் வசதியும் உண்டென்பதை ஆராய்வதற்காக மத்திய கனரகத் தொழில் இலாகா மந்திரி எம். எம். ஷா என்பார், கோவை, நெல்லை, சென்னை முதலிய நகரங்களுக்கு வருகை தருவார் என்று கூறப்படுகிறது.

'ஒரு கால் பருத்து ஒரு கால் சூம்பிக் கொண்டே போகிறது'

வடக்கு—தெற்கு நிலை குறித்து வல்லத்தரசு

"இந்தியாவின் செல்வம் முழுவதும் வட நாட்டில்தான் குவிந்திருக்கிறது — குவிந்து கொண்டிருக்கிறது—குவியப் போகிறது. இந்திய அரசாங்கத்தின் திட்டங்கள் எல்லாம் அப்படித்தான் அமைக்கப் படுகின்றன. அதற்கு மாருகத் தென்ஞடு தேய்ந்து கொண்டே வருகிறது இது, ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு நல்லதல்ல. ஒரே உடலில், ஒருகால் பருத்துக்கொண்டே போகிறது; மற்ருெரு கால் சூம்பிக்கொண்டே போகிறதென்ருல், எந்நிலை ஏற்படுமோ அந்நிலைதான் ஏற்படும்.

"தென்ஞட்டின் வளமும் வரிப் பணமும் வடநாட்டுக்குப் போகிறது; வடநாடோ, தென்ஞட்டின் கைக்கு எட்டாதத் தூரத்தில் இருக்கிறது. தென்ஞட்டின் குரல்கூட வடநாட்டில் கேட்பதில்லை. புதிய திட்டங்கள் எல்லாவற்றிலும் தென்ஞடு புறக்கணிக்கப் படுகிறது,"

என்று, மக்கள்சபை உறுப்பினர் கா. மு. வல்லத்தரசு அவர்கள், பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இலக்கிய மன்ற ஆரம்ப விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்ஞர்:—

"ஆயிரக்கணக்கில் பணத்தைச் செலவழித்துப் படித்துப் பட்டம் பெற்ற பல இலட்சக்கணக்கான இளைஞர்கள் இன்று வேலையில்லாமல் திண்டாடுகிருர்கள்..

"கடந்த எட்டு ஆண்டுகளில் பத்தாயிரம் கோடி ரூபாயிலிருந்து பதினைந்தாயிரம் கோடி ரூபாய் வரையில் வெளிநாடுகளிலிருந்து இந்திய அரசாங்கம் கடன் வாங்கியிருக்கிறது. இந்தப் பெருஞ் சுமையும் இளைஞர்களின் தலையிலேயே விழுகிறது; இந்நிலையிலிருக்கும் இளைஞர்கள்—நாளை நாடாளவரும் மக்கள், எப்படி இன்பமாக வாழமுடியும்? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் அதற்கு அடிகோலும் என்கிருர்கள்; அந்தத் திட்டம் அதிகப்படியான ஆசையால் வகுக்கப்பட்டிருக்கிறது என்று வெளிநாட்டுப் பார்வையாளர்கள் கூறியிருப்பதை ஊன்றிக் கவனிக்கவேண்டும்."

சாதுக்களின் சேவை

'சர்க்கார் பயன்படுத்திக் கொள்ளுமென்பது தவறு'

மத்திய மந்திரி விளக்குகிருர்

புதுடில்லி, செப். 1—

"'சாதுக்கள் என்போர் உடலை வளைத்து வேலை செய்யத் தெரியாதவர்கள்; அத்துடன், தங்கள் வாழ்க்கைக்கு அவர்கள் சமுதாயத்தை நம்பி இருப்பவர்கள்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அவர்கள் எப்படி வேலை செய்வார்கள்? அவர்களுடைய சேவைகளை அரசாங்கம் எப்படிப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறது"

என்ற கேள்விகளை, மக்கள்சபையில் தோழர் வீராசாமி அவர்கள் கேட்டார்.

"சாதுக்களின் சேவையை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளப் போகிறது என்று உறுப்பினர் உத்தேசமாக நினைப்பது உண்மையானதல்ல" என்று, இந்திய அரசாங்கத் திட்டத்துறை அமைச்சர் பதிலளித்தார்.

"வேலை செய்யாமல் சாப்பிடுவதில்லை என்று சாதுக்கள் சங்கற்பம் செய்திருக்கிருர்களா?" என்று மற்ருெரு உறுப்பினர் கேள்வி எழுப்பியபோது, சபைத் தலைவர், இப்பிரச்னையை முடித்துவிடும்படி உத்தரவிட்டார்.

விற்பனை வரி விதிப்பு

டில்லி கைக்கு மாறுமாம்

சென்னை, செப். 1—

மாநிலங்களுக்கிடையே விற்பனை வரி விதிக்கும் அதிகாரத்தை மக்கள் சபைக்கு மாற்றும்வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறதாம்!

இதற்கு, மாநில சர்க்காரின் சம்மதம் அவசியமாக இருப்பதால், கூடிய விரைவில் சம்மதம் தெரிவிக்கும்படி சென்னை சர்க்காரை மத்திய சர்க்கார் கேட்டிருக்கிறதாம்!

அடுத்த மாதம் சட்டசபை கூடும்போது, இதற்கு ஒப்புதல் அளிக்கப்படுமென்று செய்தி ஒன்று கூறுகிறது.

இந்தியாவில் ஈடு உற்பத்தி 1952-ல் 11,31,60,000 டன்னுக இருந்தது 1955-ல் 22,34,40,000 டன்னுக அதிகரித்தது.

நாகார்சுனசாகர் அணைக்கட்டு

நிர்மாணம் பற்றிய சில தகவல்கள்

கர்நூல், செப். 3—

"இந்தியாவிலேயே பெரியதும், உயரத்தில் இரண்டாவதாக இருப்பதுமான நாகார்சுன சாகர் அணைக்கட்டானது, பிரதானமாய் செங்கற்களால் கட்டப்படுமாம்.

சதுர அடிக்கு 15-டன்னுக்குக் குறைந்த நீர் அழுத்தமுள்ள உயரம் வரையில் செங்கற்களால் இந்த அணைக்கட்டு கட்டப்படவேண்டுமென்றும், அதற்கு மேற்பட்ட உயரத்தில் செங்கற்களும் சிமெண்டுமான காங்கிரீட்டாலோ, அல்லது முற்றிலும் சிமெண்டினுலான காங்கிரீட்டாலோ கட்டப்பட வேண்டுமென்றும் 8-பேர் குழு செய்தஎன்ஜினீரிங் சிபாரிசைத் திட்டக் கட்டுப்பாடுக் குழு ஏற்றுக்கொண்டுள்ளதாகச் செய்தி ஒன்றின்மூலம் தெரிய வருகிறது

இந்த அணைக்கட்டை உயர்தரமான முறையிலும் விரைவிலும் நிர்மாணிக்க அமெரிக்க நிபுணரொருவர் கூறிய யோசனை இதன் மூலம் மீறப்பட்டிருக்கிறது; 'இந்த அணைக்கட்டு முற்றிலும் காங்கிரீட்டால் கட்டப்பட வேண்டும்' என்று அவர் யோசனை கூறியுள்ளார்.

ஆனல், இந்த அணைக்கட்டை செங்கற்களால் நிர்மாணிக்க வேண்டுமென முடிவு செய்திருப்பதற்கு முக்கியமான இரண்டு காரணங்கள் உண்டு—அதிகப்படியாக 3,500 பேருக்கு வேலையளிக்கலாம் என்பது ஒன்று; மேலும் சுமார் ரூ 4-கோடி சிக்கனத்தை ஏற்படுத்தலாம் என்பது மற்றென்ருகும்.

8,05,000 டன் உருக்கு இறக்குமதியாம்!

உள்நாட்டுவிலையைவிட அதிகமாம்

புதுடில்லி, ஆக 30—

1956 முதல் ஆறு மாதங்களில் மொத்தம் 20 நாடுகளிலிருந்து 8,05,000 டன் உருக்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறதென்று மத்திய கனரகத் தொழில் மந்திரி, மக்கள் சபையில் தகவல் தந்தார். இந்தியாவுக்கு உருக்கு அனுப்பிய நாடுகளில் முக்கியமானவை: பிரிட்டன், ஜப்பான், ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா ஆகியவையாகும்.

வெளிநாட்டு உருக்கின் விலை உள்நாட்டு உருக்கின் விலையைவிட டன் 1-க்கு சுமார் ரூ. 200 அதிகம் என்றும், உருக்கு இறக்குமதி செய்வதற்கு அயல்நாடுகளுடன் பேச்சு வார்த்தைகள் எதுவும் நடத்தப்படவில்லையென்றும் மந்திரி கூறினுர்.

இந்தியாவிலேயே!

1955-ல் இந்தியாவில் ரூ 2,35,000 மதிப்புள்ள இரசாயன பொருள் இயந்திர சாதனங்களும், மண்பாண்டத் தயாரிப்பு இயந்திர சாதனங்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

க. அன்பழகன்

சுற்றுப் பயண நிகழ்ச்சிகள்

★

விருத்தாசலம் :

19—8—56 காலை 10 மணிக்கு பரவளூர் கிராமத்தில், தோழர் பச்சமுத்து—தோழியர் இராயம்மாள் திருமணத்திற்குத் தோழர் க. அன்பழகன் தலைமை வகித்தார். தோழர்கள் எ. கோவிந்தசாமி எம்.எல்.எ., சி. முனுசாமி ஆகியோர் வாழ்த்துரை கூறியபின் தலைவர் சீர்திருத்தத் திருமணத்தின் அவசியத்தை விளக்கி விரிவுரையாற்றினார்.

* * *

திருமுதுகுன்றம் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

அன்று இரவு 7 மணிக்கு திருமுதுகுன்றம் ஆற்று மணலில் தோழர் சி. முனுசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், எ. கோவிந்தசாமி எம்.எல்.எ., க. அன்பழகன் ஆகியோர் கழக இலட்சியத்தையும், தேர்லில் மக்கள் கடமையையும் விளக்கிப் பேசினார்கள்.

வட்டத்தூர் :

தெ. ஆ. மாவட்டம் வட்டத்தூரில், 20—8—56 காலை 6½ மணிக்கு, தோழர் பொ கலியபெருமான்—தோழியர் து ஜானகி திருமணம், தோழர் சிங்காரவேல் தலைமையில் நடைபெற்றது. தோழர் சின்னத்துரை வாழ்த்துரை கூறியபின், தோழர் க. அன்பழகன் விரிவாகச் சொற்பொழிவாற்றி வாழ்த்துரை வழங்கினார்.

தம்மம்பட்டி (சேலம்) :

இவ்வூர் கழக உயர்நிலைப்பள்ளி மாணவர் மன்றத் துவக்க விழா 20—8—56 மாலை 4 மணிக்கு திரு. காண்டீபன் தலைமையில் நிகழ்ந்தது. தோழர் க. அன்பழகன் அவர்கள் மன்றத் துவக்கவுரை நிகழ்த்தினார். தோழர் மா. அப்யாச்சாமி தோழர் அன்பழகன் அவர்களை வரவேற்றுப் பேசினார். விழா முடிவுற்றவுடன், கொப்பம்பட்டி தி. மு. கழகத் தோழர்கள் அன்பழகன் அவர்கட்குக் கைத்தறி ஆடை அணிவித்து வாழ்த்தி வழியனுப்பிவைத்தனர்.

எட்டுகுடி :

24—8—56 காலை 8 மணிக்கு, தோழர் கே வி. இராமையா தலைமையில், தோழர் சி. கிருட்டிணசாமி — தோழியர் இராசாத்தி; தோழர் முத்தையா—தோழியர் கோகிலம் திருமணங்கள் நடைபெற்றன. தோழர் சி. சுப்பையா அனைவரையும் வரவேற்றார். திரு ஓ அறிவுடைநம்பி, க. அன்பழகன் ஆகியோர் சீர்திருத்தத் திருமணத்தின் அவசியத்தை விளக்கிப் பேசினர் இத்திருமணங்களின் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது. (வரப்பெற்றோம்—நன்றி)

மரமடக்கி தி. மு. கழக ஆண்டு விழா :

26—8—56 மாலை 7½ மணியளவில் தோழர் பெ. மு. சின்னையா அவர்கள் தலைமையில் மேற்படி கழக 3-வது ஆண்டு விழா நடைபெற்றது. தோழர் அறிவுடைநம்பி கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசியபின், தோழர் க. அன்பழகன் அவர்கள் கழகம் தேர்தலில் ஈடுபடுவதன் அவசியத்தையும் பொதுமக்களின் கடமைகளையும் விளக்கிப் பேசினார். தோழர் அன்பழகன் மற்றும் சொற்பொழிவாளருக்கும், கழகச் செயலாளர் கைத்தறித் துண்டுகள் அணிவித்தார்.

விருதுநகர் கல்லூரி மன்றத் துவக்க விழா:

விருதுநகர் செந்திற்குமார் கல்லூரி தமிழ்ப் பெருமன்றத் துவக்க விழாவும், வள்ளுவர் திருநாளும், 27—8—56 மாலை 5 மணிக்கு கல்லூரி ஆடக அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. திரு. அர. சு. நாராயணசாமி அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மாணவர் தலைவர் தோழர் அ. ஜெகந்நாதன் தலைமை வகித்தார். திரு. ச. வெள்ளைச்சாமி அவர்கள் மன்றத்திற்கு ரூ. 100 நன்கொடை அளித்து வாழ்த்துரை கூறினார். பின்னர் தோழர் க. அன்பழகன் அவர்கள் மன்றத்தைத் துவக்கி வைத்து, வள்ளுவரின் பெருமையை விளக்கிக் கூறி, குறள் நெறி வழி நம் நாட்டு மக்கள் ஒழுக வேண்டும் என்பதை வலியுறுத்தி விரிவானதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அன்பில் உயர்நிலைப் பள்ளி மன்றத் துவக்கம்:

28—8—56 மாலை 4 மணிக்கு அன்பில் (திருச்சி) கழக உயர்நிலைப் பள்ளி மன்றத் துவக்க விழா தோழர் க. அன்பழகன் தலைமையில் சிறப்பாக நிகழ்ந்தது. திரு. சு. முருகையன் அனைவரையும் வரவேற்றார். பள்ளித் தலைவர், தோழர் அன்பழகன் அவர்களுக்கு மாலை அணிவித்தார். தோழர் அன்பழகன் மன்றத்தைத் துவக்கி வைத்து 'வள்ளுவர் கண்ட மனிதன்' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

குடியேற்றத்தில் அண்ணா

துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன்

குடியேற்றம் தி. மு. கழகச் சார்பில் 2—9—56 மாலை 6-மணிக்கு, மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் திரண்டிருந்தனர். மேடை அமைப்பு உள்ளிட்ட மற்ற ஏற்பாடுகள் அனைத்தும் சிறப்புற அமைந்திருந்தன.

கூட்டத்திற்குக் குடியேற்றம் நகர தி. மு. கழகச் செயலாளர் பொன்னுச்சாமி அவர்கள் தலைமை வகித்தார்.

துவக்கத்தில் போளூர் சுப்பிரமணியம் சிறிது நேரம் பேசினார்.

அடுத்து, துணைப்பொதுச்செயலாளர் என் வி. நடராசன் அவர்கள், காமராசரும் அவரைச் சார்ந்த மற்ற அமைச்சர்களும், ராஜ்ய புது அமைப்புப் பிரச்சினையில் தமிழகத்திற்கும் தமிழ் மக்களுக்கும் செய்துள்ள துரோகங்களை விளக்கிக் காட்டி, அடுத்துவரும் பொதுத் தேர்தலில், இவ்வாறு துரோகம் இழைத்தவர்கள் காங்கிரசின் பேரால் ஓட்டுக்கு வரும்போது பொதுமக்கள் தக்க புத்தி கற்பிக்க வேண்டுமென்றும், இதில் குறிப்பாகக் குடியேற்றம் தொகுதி பொது மக்கள் மிகவும் கண்ணுங்கருத்துமாயிருக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இறுதியாக அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுகையில், காமராசர் சர்க்கார் வடஇந்திய அரசியலாருக்கு அடிமைப்பட்டு நிலையிலிருந்து கொண்டு தமிழ்நாட்டிற்கு இதுவரை செய்துள்ள கேடுகளை விளக்கினார். ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு ஏமாளித்தனமாக, அல்லது ஆற்றல் இல்லாத காரணத்தால் தமிழ்நாட்டிற்குச் செலவிட வேண்டிய பங்கீட்டினை வற்புறுத்திக் கேட்கத் தவறிவிட்டார் என்பதையும் எடுத்துக் காட்டினார். அதுபோலவே வேலையின்மையைப் போக்கவும், பாட்டாளிகளுக்கு—உழவர்களுக்கு நிரந்தர வாழ்வளிக்கவும் காங்கிரஸ் ஆட்சி—காமராசர் ஆட்சி தவறிவிட்டது என்பது மட்டுமல்ல, அதற்குப் பதிலாக முதலாளித்துவத்திற்கு எவ்வளவு பாதுகாப்பு அளித்து வருகிறதென்பதையும் அண்ணா அவர்கள் விளக்கிக் கூறினார்கள், மற்றும் நம் மாநிலத்திற்கு தமிழ்நாடு எனப் பெயரிடக்கூட மனவளம் இல்லாதவர்களாகக் காமராசரும் அவரைச்சார்ந்த மற்றவர்களும் இருந்து வருவதையும் விவரித்துக் கூறினார்.

அண்ணா அவர்களுக்கும் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுக்கும், தி. மு. கழகக் கிளைகள், தொழிலாளர் சங்கங்கள், படிப்பகங்கள் ஆகியவைகளின் சார்பில் கைத்தறித் துணிகளும் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தேர்தல் நிதிக்காக அழகனூபுரம் தி. மு கழகச் சார்பில் ரூ. 5-ம், கவுசம்பட்டி தி. மு. கழகம் ரூ. 1-ம், வேலூர் நகர தி. மு. கழகம் ரூ. 1-ம், குடியேற்றம் மக்கள் மன்றச் சார்பில் 64 காலணாக்கள் கொண்ட பணமுடிப்பும் அண்ணா அவர்களிடம் அளிக்கப்பட்டன.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு தோழர் ரங்கசாமி நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

உங்கள் குறிப்புக்கு !

புதுடில்லி, ஆக. 31—

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் தற்போது 1,247 கூட்டுறவுப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. மாநில வாரியாக அவற்றின் எண்ணிக்கை வருமாறு :—

பம்பாய் 342; பஞ்சாப் 180; உத்திரப் பிரதேசம் 168; அசாம் 90; இராஜஸ்தான் 76; மேற்கு வங்காளம் 75; பெப்சு 58; மத்திய பாரத் 56; விந்தியப் பிரதேசம் 34; மீதியுள்ள ஆஜ்மீர், ஆந்திரா, பீகார், போப்பால், குடகு, டில்லி, மத்தியப் பிரதேசம், மணிப்பூர், சென்னை, ஒரிசா, சௌராஷ்டிரம், திரிபுரா, திரு-கொச்சி ஆகிய மாநிலங்களில் 173.

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம்

பெரும் பணம் பாழாவது நியாயம்தானும்

குமாரசாமி இராசாவின் கண்டனத்திற்கு மறுப்பு

கல்கத்தா, செப். 1—

ஒரிசா கவர்னராக இருந்துவரும் திரு. குமாரசாமி இராசா அவர்கள், அண்மையில் சேலைக் கூட்டம் ஒன்றில் பேசுகையில், தாமோதர் நதிப் பள்ளத்தாக்குத் திட்டத்தில் பொதுப் பணம் வீணாகச் செலவழிக்கப்பட்டு பாழாக்கப்படுகிறது என்று குற்றஞ்சுமத்திப் பேசியது அனைவரும் அறிந்ததே.

இப்போது, அவரது கூற்றை மறுத்து, அத்திட்டக் கார்ப்பொரேஷன் தலைவர், அங்கு அவ்வாறு பணம் செலவழிக்கப்படுவது நியாயமே என்று வாதாடுமுகத்தான் அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறார். அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது :—

"தென்னாட்டில் பாறைகளைக் கொண்டு அணைகள் கட்டப்படுவது போலல்லாமல், ஏராளமான அளவிற்குச் சிமெண்டு உபயோகித்து, இயந்திரச் சாதனங்களைக்கொண்டு காங்கிரீட் அணைகள் இங்கு கட்டப்படுகின்றன என்று அவர் கண்டித்திருக்கிறார். தென்னிந்தியாவில் ஏராளமான பல வகைப்பட்டப் பாறைகள் இருப்பதும், அவை தேவையான 'தரம்'களில் கிடைப்பதும், அதனால்தான் அவை தலைமுறை தலைமுறையாக உபயோகிக்கப்பட்டுவருகின்றன என்பதும் அவர் அறிந்திருக்க வேண்டும். அணைகளை வேகமாகக் கட்டி முடிக்க சிமெண்டு நல்ல பொருளாகும். அதுபோலவே துரிதமான வேலைகளுக்கு இயந்திரச் சாதனங்களும் தேவைப்படும் இவ் விஷயத்தில் நாம் தொழில் நிபுணர்களின் நுணுக்கக் கருத்துக்களையே பின்பற்ற வேண்டும். ஆகையால் அவருடைய யோசனைகளைக் கேட்டுக்கொண்டிருக்க முடியாது. முடிவான கட்டுக்கோப்பு முறை தயாரிக்கப்படுவதற்கு முன்னர், வேலையின் இலாப நஷ்டக் கணக்குகளும் விரிவான முழு அளவிற்குப் பரிசீலிக்கப்படுகின்றன.

"ரூ. 10 கோடி செலவில் பவானிசாகர் அணை ஒரே ஒரு நிர்வாக எஞ்சினீயர் மேற்பார்வையில் நடைபெற்றதாகவும், ஆனால் அதே நேரத்தில், தாமோதர் திட்டத்தில் ஒரு வேலையை ஒரு தலைமை எஞ்சினீயரின் கீழ் ஆறு நிர்வாக எஞ்சினீயர்கள் மேற்பார்வையில் நடைபெறுகிறது என்றும் ஒப்பிட்டுப் பேசுவதில் பயனொன்றும் கிடையாது. பவானிசாகர் திட்டத்தைப் பெரும்பாலும் காண்டிராக்டர்களே கட்டினார் என்பதையும், வெகு நீண்ட காலத்திற்கு வேலை நடைபெற்றது என்பதையும் குமாரசாமி இராசா மறந்துவிடுகிறார்; ஆனால் தாமோதர் திட்டத்தைச் சேர்ந்த மைதான் அணையை சர்க்கார் இலாகாவே மேற்கொண்டு நடத்திற்று. இந்த அணைக்கட்டு வேலை விரைவிலேயே முடிவுற வேண்டுமென்ற கருத்துடன் புதிய இயந்திரச் சாதனங்கள் உபயோகிக்கப்பட்டன. எனவே, பவானிசாகரைக் காட்டிலும் இந்தத் திட்டத்தில், மேல் அந்தஸ்துடைய தொழில் நுணுக்க அதிகாரிகள் அதிகம் பேர் இருந்தது இயற்கையேயாகும்.

'வேலைக்காகும் செலவு, வேலை ஆரம்பித்து முடிவு பெறுவதற்கு இடையிலுள்ள காலம், வேலை நிலைமை ஆகியவற்றையெல்லாம் மனதில்கொண்டு தாமோதர் நதிப் பள்ளத்தாக்குத் திட்டத்தின் கீழ் வரும் பல்வேறு அணைக்கட்டுகளையும் மற்ற அணைக்கட்டுகளையும் ஒப்பிட்டால், தாமோதர் திட்ட அணைகள் மற்ற அணைகளுக்கு எந்தவகையிலும் பின்னடைந்தவையல்ல என்பது தெளிவாகும்.

"என்னதான் இருந்தாலும், ஒரு மாநிலத்தின் கவர்னர் தமக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத ஒரு நிறுவனத்தைக் கண்டிப்பதானது அவ்வளவு உசிதமாகத் தெரியவில்லை; இவ்வாறு அவர் கூறியிருப்பதானது சட்டப்படி நியாயமானதுதானா—சரிதானா என்றும் நான் வினவ விரும்புகிறேன்."

அணுகுண்டு சோதனைகளின் கொடிய பலன் !

இந்திய விஞ்ஞானி விளக்கம்

"அணுகுண்டு சோதனைகளிலிருந்து எழும் கதிரியக்கத்தின் விளைவுகள், தனி நபரிடம் இப்பொழுது காணப்பட இயலாது; என்றாலும், எதிர்காலத்தில், இராட்சசப் பிறவிகளும், குறை உறுப்பினர்களும், விசித்திரமான பிறவிகளும் மட்டுமல்லாமல் மிக மட்டரகமான மனித இனம்கூட உண்டாகலாம்," என்று, அமெரிக்காவிலுள்ள மெக்சிகோவில் நடைபெற்ற சர்வதேச கதிரியக்க மாநாட்டிற்கு இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்றிருந்த டாக்டர் என். பி. ராய் கூறியுள்ளார்.

"தற்போதைய அணுகுண்டு சோதனைக் கதிரியக்கத்தினால் உடனடியான அபாயம் தற்போது வாழ்ந்திருப்பவர்களுக்கு இல்லையென்றாலும், பிற்காலத்தில் எலும்புப் புற்றுநோய் ஏற்படக்கூடும்" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்,

உலக முழுவதிலுமிருந்து எஞ்சினீயர்-விஞ்ஞானிகள்

அணுசக்தி மாநாட்டில் கலந்து கொள்ளக்கூடுமாம்

உலக முழுவதிலுமிருந்து எஞ்சினீயர்களும், விஞ்ஞானிகளும் தொழில் தலைவர்களும் 1957 மார்ச் 11-ந் தேதிமுதல் 15-ந்தேதி வரை அமெரிக்காவிலுள்ள பிலடெல்பியாவில் நடைபெறும் அணுசக்தி மகாநாட்டுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

அணுசக்தியையும், மற்றும் அணுசக்திக் கருவிகளையும் அடக்கிக் கையாளுவதற்கு மிகவும் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளைக் காட்டும் கண்காட்சியும் நடைபெறுமாம்.

'கல்வித்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிக மிகக் குறைவானது'

சி. பி. இராமசாமி அய்யர் கூறுகிறார்

உதகை, செப் 1—

"ரூ 4,800 கோடி பெறுமானமுள்ள இரண்டாம் திட்டத்தில் கல்வித் துறைக்கு ரூ 325 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது; நான், பல்கலைக் கழகங்களுக்கு மானியம் வழங்கும் குழுவில் ஒரு உறுப்பினன்; அந்தக் குழுவிற்கு, ரூ. 4,800 கோடி பெறுமான திட்டத்திலிருந்து ரூ. 35 கோடி மட்டுமே ஒதுக்கித் தரப்பட்டிருக்கிறது ; இது போதுமானதல்ல; கல்வித் துறையில் ஏற்பட வேண்டிய வளர்ச்சியைக் கணக்கிட்டால் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மிகமிகக் குறைவானதாகும்,"

என்று, டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர், ஆசிரியர்களடங்கிய கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

தாழ்த்தப்பட்டோருக்கு 40 இடங்கள்

சென்னை, ஆக. 31—

வருகிற பொதுத் தேர்தலுக்கான தொகுதிகள் நிர்ணயிப்பதில் மாறுதல்கள் அனைத்தும் மேற்கொண்டான பின்னர், தேர்தல் குழு, சென்னை மாநில சட்ட (கீழ்) சபையில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கையை 39-லிருந்து 40-ஆக உயர்த்த உத்திரவிட்டிருக்கின்றது என்று நம்பப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட 40 இடங்களும் கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்பட்டிருக்கின்றன:—

சென்னை—1; செங்கல்பட்டு—4; வட ஆற்காடு—4; சேலம்—4; கோவை—3; தென் ஆற்காடு—5; தஞ்சை—4; திருச்சி—3; மதுரை—3; இராமநாதபுரம்—2; நெல்லை—3; மலபார்—3; தென்கன்னடம்—1.

ரஷ்யாவுக்குக் காப்பி, தேயிலை ஏற்றுமதி

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, ஆக. 31—

இந்தியாவிலிருந்து 1956 ஏப்ரல், மே மாதங்களில் 500 டன் காப்பி ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறதென்று மக்கள் சபையில், வர்த்தகம்—தொழிலியல் மந்திரி தெரிவித்தார்.

இவ்வருடம் ஏப்ரல் ஆரம்பத்திலிருந்து ஜூலை 7-ந் தேதிவரையில் கல்கத்தாவிலிருந்து ரஷ்யாவுக்கு 3,31,284 பவுண்டு தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டதாம்!

கோதுமை அறுவடைக்கு இராணுவ உதவி !

மாஸ்கோ, செப். 2—

இந்த ஆண்டில் சோவியத் ரஷ்யாவில் பயிர் விளைச்சல் மிக நன்றாக இருக்கிறதாம். ஆனால், விளைந்த பயிரை அறுவடை செய்ய இயலாத அளவுக்கு அங்கு இப்போது பெருமழை, பிடித்துக் கொண்டுள்ளதாம்; அதனால், அறுவடை வேலைக்கே ஆபத்து ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இங்கு கசாக்ஸ்தான் எனும் மாவட்டத்தில் சில இடங்களில் கோதுமை அறுவடைக்கு இராணுவ உதவி கோரப்பட்டதாகவும் தெரிகிறது.

என். வி. நடராசன் அறிவுரை

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

யதிலும் சர்க்கார் பஞ்ச புத்திலைப் காட்டி வருவதாக உங்கள் செயலாளர் கூறினர். 'கிராஜுடி' பணம் பெறுவதிலும் பெருந் தொல்லைப்பட வேண்டியதாகயிருக்கிறதென கூட்டத் தலைவர் எடுத்துக் காட்டினர். நீங்கள் செய்யும் வேலையோ மிகவும் கடினமானது.

"ஆக, இந்தக் குறைபாடுகளை சர்க்கார் உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்ற எண்ணம் உங்கள் அனைவருக்கும் இருக்கிறது. ஆனால் அதற்கான வழிவகைகளில் நீங்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சி பயன் தரத் தக்கதாயில்லை என்று நான் கூறும்போது யாரும் வருத்தப்பட மாட்டீர்கள் என்று கருதுகிறேன்.

"சர்க்கார் பஸ் தொழிலாளர்களாகிய நீங்கள் ஏன் மூன்று சங்கங்களாகப் பிரிந்து நிற்கவேண்டும்? நீங்கள் ஒன்று சேருவதற்குத் தடையாயிருப்பது எது? அந்நிய சக்தியினைத் தகர்த்தெறிந்து ஒன்றுபட்டு நின்று சர்க்காரை ஒருமித்தக் குரலில் எச்சரிக்கை செய்வது தானே?

"நான் அறிந்தவரையில் இப்படி மூன்று சங்கங்களாகப் பிரிந்து நிற்பதற்கான காரணங்களில் ஒன்று, சங்கத் தலைமைப் பதவி என்பதாகக் கூறப்படுகிறது; அது உண்மையானல் மிகவும் வருந்துகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த எங்களுக்கு, பொதுவாக எல்லாத் தொழிற் சங்கங்களுக்கும் தொழிலாளர்களே நிர்வாகிகளாகவும், மற்றவர்கள் காப்பாளர்களாக—(Patrons) அதுவும் அவசியப்பட்டால் இருக்கலாமேயன்றி, வெளியார்தான் தொழிற்சங்கங்களின் தலைமைப் பீடத்தை அலங்கரிக்க வேண்டும் என்ற அவலநிலை தொழிற் சங்கத் துறையிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்பதே நோக்கமாகும்.

"இதனை அடிப்படையாகக் கொண்டு மூன்று சங்கங்களாகப் பிரிந்துள்ள சர்க்கார் பஸ் தொழிலாளர்கள், ஒரே சங்கமாகப் பணியாற்றுவதற்கு ஆவன செய்ய முற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்கேற்ப இம்மூன்று சங்கங்களிலுள்ள தலைவர்களும் மனமார விட்டுக்கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

"சர்க்கார் பஸ் தொழிலாளர்களாகிய நீங்கள் அனைவரும் இந்த அடிப்படையில் ஒன்று சேர்ந்துவிட்டதாக அறிவித்துவிடுங்கள்; அவ்விதம் அறிவிக்கப்படும் நாளிலிருந்து ஒரு திங்களுக்குள் உங்கள் குறைகள் அனைத்தும் ஆளும் வர்க்கம் நீக்கும்படியான நிலையை நாம் உண்டாக்கலாம்; ஒருக்கால் ஆளும் வர்க்கத்தினர் பிடிவாதம் காட்டினுல், இந்த ஒன்றுபட்ட சக்தியினுல் அந்தப் பிடிவாதம் தொழிலாளர்களின் ஒன்றுபட்ட மகத்தான சக்தியின் முன் மண்டியிடும் நிலையை நிச்சயம் உண்டாக்க முடியும் என்று உறுதி கூறுகிறேன்.

"பொதுவாகத் தொழிலாளர் தோழர்கள் சங்கங்களை அமைத்துத் தங்களின் உரிமைகளுக்காகப் பணியாற்றுபவர்கள்—எந்த குறிப்பிட்ட கட்சிக்கும் தங்களின் சக்தியை அடிமையாக்கிக்கொள்ளக் கூடாது. காங்கிரசோ, கம்யூனிஸ்டோ, சோஷலிஸ்டோ, தி. மு. கழகமோ எந்தக் கட்சியானலும் தொழிற் சங்கங்கள் வளர்ச்சியுறுவதற்கு என்ன செய்ய இருக்கிறது என்ற சிந்தனையுடன் தொழிற் சங்கங்களை நடத்திச் செல்ல வேண்டுமேயல்லாது, அரசியல் கட்சிகளுக்குத் தொழிற் சங்கங்கள் இரையாகக் கூடாதென்பதே எங்களுடைய திட்டவட்டமான எண்ணமாகும்.

"எனவே, பிளவுபட்டுள்ள சர்க்கார் பஸ் தொழிலாளர்கள் ஒன்று சேருவதற்கு முனைய வேண்டுகிறேன். தங்களின் தனிப்பட்ட செல்வாக்குக்காக — கட்சியின் வளர்ச்சிக்காகத்தொழிலாளர்களின் ஒன்றுபட்ட சக்தியைப் பாழாக்கும் அவல நிலைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

"சர்க்கார் பஸ் தொழிலாளர் மட்டுமல்லாது மற்ற தொழிலாளர்களும் இந்த அடிப்படையில் ஒன்று திரள வேண்டுகிறேன். இவ்விதம் ஒன்றுபட்ட தன்மை வளருவதற்கும், தொழிலாளர்கள் தங்களின் உரிமைகளைப் பெறுவதற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தனது மனப்பூர்வமான ஒத்துழைப்பைத் தருமென்றும் உங்களுக்குத் தெரிவித்துக்கொண்டு தொழிற் சங்கங்கள் முன்னைய வலிவையும் பொலிவையும் பெறவேண்டுமென்று பெரிதும் ஆசைப்படுகிறேன்."

துவக்கத்தில் சங்கப் பொதுச் செயலாளர் டாக்டர் கிருஷ்ண பிள்ளை, பஸ் தொழிலாளர் பச்சையப்பா ஆகியோர் பேசினர்.

47 காங்கிரசாருக்குக் கட்சியிலிருந்து சீட்டு!

ஐதராபாத், செப். 3—

சமீபத்தில் நடைபெற்ற நகரசபைத் தேர்தல்களில் உத்தியோகபூர்வமாக நிறுத்தப்பட்ட காங்கிரசு அபேட்சகர்களை எதிர்த்ததற்காக 47 காங்கிரசுக்காரர்கள், காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றனர்.

1956 ஜூலை மாதம் 1-ந் தேதியிலிருந்து 4 ஆண்டுகளுக்கு இவர்கள் காங்கிரசில் உறுப்பினர்களாக முடியாதெனத் தடை விதிக்கப்பட்டிருக்கிறதாம்.

அறிவிப்பு

தோழியர் தயாளு—கருணாநிதி அவர்கட்கு உடல்நலமின்றி டாக்டர் இலட்சுமணசாமி அவர்களின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 3—9—56 காலை வயிற்றில் அறுவை முறை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. அதனல் செப். 2, 3 ஆகிய தேதிகளில் ஒப்புதல் தந்திருந்த திருச்செங்கோடு, தம்மம்பட்டி கூட்டங்களுக்கு வர இயலாது போய்விட்டது என்றும், விரைவில் வேறுநாள் குறிப்பிடுவதாகவும் தோழர் மு. கருணாநிதி அறிவிக்கிறார்.

கழகக் கூட்டம்

★

காட்டுப்பாடி:

இராபர்ட்சன்பேட்டையில்

6—9—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: வி. ஏ. பசூல்

பேசுபவர்: சி. பி. சிற்றரசு

சொற்பயிற்சிக் கூட்டம்

5—9—56 இரவு 7-மணிக்கு, சென்னை—சூளை ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் நினைவுப் படிப்பகத்தில், தோழர் இளம்பிறை தலைமையில், 'ஐந்தாண்டுத் திட்டத்தில் வடநாடும் — தென்னாடும்' என்ற தலைப்பில், கழகத் தோழர்கள் பலர் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

5—9—56 மாலை 6-மணிக்கு, சென்னை—புரசைவாக்கம், வெள்ளாளத் தெரு, எண் 100, தொண்டை மண்டல வேளாளர் சங்கத்தில், பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

போட்டித் தொழிற்சங்கப் பகைமையால் ஏற்பட்ட விளைவு?

ஒரு ஆலைத் தொழிலாளி கொலை; மேலும் இருவருக்கு வெட்டுகாயம்!

கோவை, செப். 3—

கோவை சிவானந்தா ஆலை அருகில், ஒரு ஆலைத் தொழிலாளி குத்திக் கொலை செய்யப்பட்டதாகவும், இரு தொழிலாளிகள் தாக்கப்பட்டதாகவும் செய்தியொன்று கிடைத்துள்ளதாக இதழ் ஒன்றின் மூலம் தெரியவருகிறது.

கொலையுண்ட தொழிலாளிக்கு அனுதாபமாக நகரிலுள்ள ஆலைகளில் பெரும்பாலானவை இன்று அர்த்தால் மேற்கொண்டனவாம்.

தொழில் சங்கப் பகைமையே இதற்குக் காரணமென்று சொல்லப்படுகிறதாம்.

மேலும் இரு நபர்கள் தாக்கப்பட்டதாகவும், வெட்டப்பட்டதாகவும் போலீசாரிடம் கொடுக்கப்பட்டுள்ள ஒரு புகாரில் கூறப்பட்டிருக்கிறதாம்.

சம்பள விகிதம் திருத்தப்படுகிறது

உத்தரவுப்படி தராவிட்டால் மானியம் நிறுத்தப்படுமாம்

நாகபுரி, செப். 2—

சர்க்கார் பள்ளிகளில் வேலை செய்பவர்களைப்போன்றே இதர தனிப்பட்ட பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் சம்பளம் தரப்பட வேண்டும் என்ற சர்க்காரின் உத்தரவை செப்டம்பர் 15-ந்தேதிக்குள் அமுல் செய்யுமாறு மத்திய பிரதேச மாநில கல்வி அதிகாரி உத்தரவிட்டிருக்கிறார் என்று தெரியவருகிறது.

திருத்தப்பட்ட சம்பள விகிதங்களின்படி சம்பளம் தராவிட்டால், பள்ளிக்குத் தரப்படும் மானியம் நிறுத்தப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

தாம்பரம்—விழுப்புரம் மின்சார இரயில்?

தாம்பரம்—விழுப்புரத்திற்கிடையே தண்டவாளத்தைப் பலப்படுத்தும் வேலை இன்னும் இரண்டொரு மாதங்களில் ஆரம்பமாகும்; விழுப்புரம் வரையில மின்சார இரயில் விடுவதற்கான திட்டத்திற்குப் பூர்வாங்கமாக செய்யும் வேலை இதுவெனத் தெரிகிறது.

சென்னையின் கோரிக்கை

ஆந்திர சர்க்கார் ஆதரிக்கவில்லையாம்

சென்னை—ஆந்திரா எல்லைத் தகராறைத் தீர்ப்பது சம்பந்தமாகத் தனது நிலையை மாற்றிக்கொள்ள ஆந்திர சர்க்கார் தயாராக இல்லையென்று தெரிகிறது.

இந்தியா முழுமைக்கும் ஒரு பொதுக் கொள்கையை வகுத்து, அந்த அடிப்படையில் இத்தகராறைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பது ஆந்திராவின் நிலையாகுமாம்.

தனியாக ஒரு எல்லைக் குழுவை நியமித்து இப்பிரச்சினையைத் தீர்க்குமாறு சென்னை சர்க்கார் கோருகிறது; இந்த யோசனையை ஆந்திர சர்க்கார் ஆதரிக்கவில்லையெனத் தெரிகிறது.

நியமிக்கப்பட்டார்களாம்!

மத்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியும், வி. கே. கிருஷ்ணமேனனும் திட்டக் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்களாம்.

'ஏட்டிலும் பாட்டிலும் சாதனை; ஆனால் நடைமுறையில் வேதனை!'

'உற்பத்தி இல்லாமலேயே காகிதத்தில் கணக்கைக் காட்டிவிட்டார்கள் போலும்!'

'ஆண்டிகள் கூடி மதிப்பீடு போடுகிறார்களா என்று மலைக்க வேண்டியுள்ளது'

"சில விஷயங்கள் போகிற போக்கைப் பார்த்தால், டில்லியில், விஷயம் தெரிந்த அதிகாரிகள் மதிப்பீடு போடுகிறார்களா அல்லது ஆண்டிகள் கூடி மதிப்பீடு போடுகிறார்களா என்று மலைக்க வேண்டியுள்ளது.

"காலஞ்சென்ற ரபி அகமத் கித்வாய் உணவு மந்திரியாக இருந்தபோது, இந்தியா உணவுப் பொருளை ஏற்றுமதி செய்யும் நிலைக்கு வந்துவிட்டது' என்று அடிக்கடி சொன்னர். சமீப காலத்தில்கூட சில அதிகாரிகளும் மந்திரிகளும் இதே பாட்டைப் பாடினர்கள். ஆனல், இப்போதுள்ள நிலைமை என்ன?

"சுமார் ரூ. 89 கோடிக்கு இந்தியா உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யப்போகிறது அமெரிக்காவிலிருந்து மட்டும் ரூ 17·2 கோடிக்குக் கோதுமை, அரிசி உள்பட உணவுப் பொருள்களை இந்தியா இறக்குமதி செய்யப்போகிறதாம். இதற்கு முன்பு ஒரே தடவையில் இவ்வளவு பெரிய தொகைக்கு அமெரிக்காவிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்தது கிடையாது.

"நடைமுறையில் விஷயம் இப்படி இருந்தபோதிலும், திட்டமும் மதிப்பீடுகளும் வேறுவிதமாக உள்ளன.

"முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காகத் தீவிரப் பிரச்சாரம் நடத்துகிறார்கள்! நாடகம் போட்டுக் கதா காலட்சேபமும் நடக்கிறது! பேச்சுக்கும், பாட்டுக்கும் குறைச்சல் இல்லை!

"முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 'நீரைத் தேக்கினேம்; நெல்லைப் பெருக்கினேம்' என்று கூத்தாடுகிறார்கள்! பேச்சிலும் பாட்டிலும் உள்ள சாதனை இது!

"நடைமுறையில் காணும் வேதனை என்ன தெரியுமா? உணவுப் பொருளில் இந்தியா சுயதேவைப் பூர்த்தியடைய வேண்டுமென்பதுதான் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படை இலட்சியம்; இதை, 'விவசாயத் திட்டம்' என்றும் அழைத்தார்கள். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தை 'உணவுப் பொருள் பெருக்கத் திட்டம்,' என்று பொருத்தமாக அழைத்தார்கள் பிரச்சாரப்படி பார்த்தால் இலட்சியமும் நிறைவேறிவிட்டது. 'முதலாவது திட்டம் பெரும் வெற்றி' என்று கூறுகிறார்கள்.

"தயவுசெய்து கண்ணைக் கசக்கிக்கொண்டு இந்தப் புள்ளி விவரத்தைப் பாருங்கள்; முதலாவது ஐந்தாண்டுத் திட்ட சாதனை குறித்து மத்திய சர்க்கார் வெளியிட்டுள்ள ஒரு பிரசுரத்தில் இப்புள்ளி விவரம் காணப்படுகிறது—

"முதலாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் உணவுப் பொருள் பெருக்கத்தின் இலட்சிய அளவு 6 கோடி 16 இலட்சம் டன் என்று நிர்ணயித்தார்கள்; ஆனல் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட மூன்றாவது வருடத்திலேயே உணவுப் பொருள் உற்பத்தி 6 கோடி 87 இலட்சம் டன் பெருகிவிட்டது. திட்டத்தின் மூன்றாவது வருடத்திலேயே இலட்சிய அளவைக் கடந்துவிட்டார்கள்.

"எண்ணெய் வித்துக்கள் முன்பு 51 இலட்சம் டன் உற்பத்தியாயிற்று. முதலாவது ஐந்து வருடத் திட்டத்தில் உற்பத்தி 55 இலட்சம் டன்னுக்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனல், நான்காவது வருடத்திலேயே எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 59 இலட்சம் டன்னுக்கு அதிகரித்துவிட்டது. திட்ட காலம் முடியு முன்பே இப்பொருள்களில் இலட்சிய அளவைக் கடந்தாகிவிட்டது.

"பிரச்சாரம், பிரசுரங்கள், புள்ளி விவர மதிப்பீடுகள் இவைகளில் இத்தகைய சாதனைகளைக் காண்கிறோம்; ஆனல், நடைமுறையில் இந்த சாதனைகள் உண்மையாக இருக்குமானல் நிலைமையே வேறுவிதமாக இருக்கவேண்டும்; இந்தியா உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்திருக்க வேண்டும்; அத்துடன் விலைவாசிகளும் இறங்கியிருக்க வேண்டும். 'உற்பத்திதான் நாட்டின் செல்வம்; அதைப் பெருக்குங்கள்; எல்லோருக்கும் சுகவாழ்வு பிறக்கும்,' என்று மேடைகளில் கூறினர்கள்.

"எதிர்பார்த்த அளவுக்கு மேல் உற்பத்தி பெருகிற்று. பேச்சிலும், புள்ளி விவரத்திலும் உள்ள சாதனை நடைமுறையில் இல்லை. அது பெரும் வேதனையாக மாறிவிட்டது.

"முதலாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்கு வெற்றிவிழா கொண்டாடினர்கள்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஆரம்பவிழா பூஜையும் முடிந்துவிட்டது. ஆனல் சூழ்நிலை எப்படியிருக்கிறது?

"மேலும் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களுக்கு உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யப் போகிறார்கள்.

"42 ரூபாய்க்கு விற்ற அரிசி மூட்டை 53 ரூபாய்க்கு ஏறிவிட்டது.

"வீசை ஒரு ரூபாய்க்கு விற்ற நல்லெண்ணெய் இரண்டு ரூபாய்க்கு ஏறிவிட்டது.

"வீசை எட்டணுவுக்கு விற்காமல் கிடந்த கடலை எண்ணெய் ஒரு ரூபாய் மூன்றணுவுக்கு ஸ்திரநிலையடைந்துவிட்டது.

"உணவுப் பொருளும் எண்ணெய் வித்துக்களும் இலட்சிய அளவுக்கும் பெருவாரியாகப் பெருகிய பின்பு இந்த நிலை!

"ஏட்டிலும் பாட்டிலும் சாதனை! ஆனல் நடைமுறையில் வேதனை!

"புள்ளி விவரங்கள் தவறான அடிப்படையில் போடப்பட்டுள்ளன' என்று உத்திரப்பிரதேச கவர்னர் முன்ஷி கூறுகிறார். டில்லியில் உள்ளவர்களுக்கு சரியான திட்ட மதிப்பீடு போடத் தெரியாதென்று ஒரிசா கவர்னர் குமாரசாமி இராசா இடித்துக் காட்டுகிறார். இவைகளையெல்லாம் பார்க்கும்போது உற்பத்தி இல்லாமலேயே காகிதத்தில் கணக்கைக் காட்டிவிட்டார்கள் போலிருக்கிறது!"

இவ்வாறு, 1-9-56 'நவ இந்தியா' இதழில், 'ஊர் வம்பு' என்ற தலைப்பில், 'பு ஆர்.' என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.